**இன்று (22.9.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, வருகை தந்துள்ள ஊடக மற்றும் பத்திரிகை நண்பர்களுக்கு முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளின்படி, மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலைத் தடுக்க தொடர்ந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக தமிழகத்தில் நோய்த் தொற்றுப் பரவல் படிப்படியாகக் குறையத் தொடங்கி, குணமடைபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து, இறப்பவர்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

நேற்றையதினம், தமிழகத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் மொத்தமாக பாதிக்கப்பட்டவர்கள் 5,47,337 நபர்கள், குணமடைந்து வீடு திரும்பியவர்கள் 4,91,971 நபர்கள், இறந்தவர்கள் 8,871 நபர்கள். 21.9.2020 அன்று பாதிக்கப்பட்டவர்கள் 5,344 நபர்கள், குணமடைந்து வீடு திரும்பியவர்கள் 5,492 நபர்கள், தற்போது சிகிச்சையில் உள்ளவர்கள் 46,495 நபர்கள். 21.9.2020 வரை 65,55,328 பரிசோதனைகள் நடைபெற்றுள்ளன. 21.9.2020 அன்று மட்டும் 80,672 பரிசோதனைகள் நடைபெற்றுள்ளன. மொத்தப் பரிசோதனை நிலையங்கள் 174 உள்ளன.

**கேள்வி:** கொரோனாவிற்கு புதுவிதமான முயற்சிகள் ஏதாவது கையாள வாய்ப்பிருக்கிறதா ?

**பதில்:** ஏதாவது வந்தால் முயற்சி எடுப்போம். இந்த நோய்க்கு மருந்து முழுமையாகக் கண்டுபிடிக்கவில்லை. இருந்தாலும், மருத்துவ வல்லுநர்கள் ஆலோசனைகளின்படி, அரசு அறிவிக்கிற வழிமுறைகளான முகக்கவசம் அணிய வேண்டும், சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும், வெளியில் சென்று வீடு திரும்பும்போது கைகளை சுத்தமாக சோப்பு போட்டுக் கழுவிய பின் வீட்டிற்குள் செல்ல வேண்டும், வீட்டிலிருக்கிற கழிப்பறைகளை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும், வீட்டைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் ஆகியவற்றைப் பின்பற்றினால் நோய்த் தொற்றுப் பரவலைத் தடுக்க முடியும்.

**கேள்வி:** இந்த அரசு விவசாயிகளுக்கான அரசு என்று சொல்கிறீர்கள். ஆனால், வேளாண்மை மசோதாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரு வேறு கருத்துக்களைத் தெரிவிக்கின்றனரே ? அதிமுக அரசின் நிலைப்பாட்டிற்கு திரு.எஸ்.ஆர்.பாலசுப்ரமணியம் மாற்றுக் கருத்தைத் தெரிவித்துள்ளாரே ?

**பதில்:** அதற்கு விளக்கம் கேட்கப்படமென்று நான் ஏற்கனவே தெரிவித்துவிட்டேன்.

**கேள்வி:** வேளாண் மசோதாவை அதிமுக ஆதரிப்பதற்கும், திமுக–வின் ஸ்டாலின் எதிர்ப்பதற்கும் என்ன வேறுபாடு ?

**பதில்:** அவர் இந்தச் சட்டத்தைப் பற்றி தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறார். மத்திய அரசு கொண்டு வந்த இந்த வேளாண் சட்டங்களினால் விவசாயிகளுக்கு எந்த பாதிப்பும் கிடையாது. விவசாயிகளுக்கு பலன் தருகிற சட்டமாகக் கருதப்படுவதால்தான் நாங்கள் ஆதரித்துள்ளோம். ஏற்கனவே, தொடர்ந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சொல்வது – விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் எந்தத் திட்டமாக இருந்தாலும் அதை ஆதரிப்போம் என்பதுதான். தமிழக விவசாயிகளுக்கு, தமிழக மக்களுக்கு எதிராக வருகிற எந்தத் திட்டமாக இருந்தாலும் அதற்கு எங்கள் அரசு எதிர்ப்புத் தெரிவிக்குமென்று தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

அந்த வகையில், மத்திய அரசு கொண்டு வந்த **முதல் சட்டம்– விலை உறுதியளிப்பு மற்றும் பண்ணை ஒப்பந்தத்திற்கான விவசாயிகள் (அதிகாரம் மற்றும் பாதுகாப்பு) அவசரச் சட்டம், 2020**

இச்சட்டம் தமிழ்நாட்டில் ஏற்கனவே இயற்றப்பட்டுள்ள தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணை மற்றும் சேவைகள் (ஊக்குவித்தல் மற்றும் உதவுதல்) சட்டம் 2019–ஐ ஒட்டியே உள்ளது. ஏற்கனவே தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்ட சட்டத்தையொட்டிதான் மத்திய அரசு இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இச்சட்டம் இந்தியாவின் பிற மாநிலங்களிலும், முன்னர் முறைசாரா நிலையிலிருந்த ஒப்பந்தப் பண்ணையத்தினை ஒழுங்குபடுத்துவதோடு, விவசாயிகளை விலை வீழ்ச்சியிலிருந்து காக்கும். எளிதில்

அழுகும் வேளாண் பொருட்களின் கொள்முதல் குறையும்போதோ அல்லது கொள்முதலே இல்லாதபோதோ அப்பொருட்கள் தேங்கி, விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்காமல் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். இச்சட்டத்தின்படி, ஒப்பந்தத்தில் பங்குபெற விரும்பும் விவசாயிகள் மட்டுமே வேளாண்மைத் துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) முன்னிலையில் கொள்முதலாளர்களுடன் இந்த ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள வேண்டும். இப்படி ஒப்பந்தம் செய்துகொள்ளும்போது, இருவருக்கிடையே ஒருமித்த கருத்தும் ஒளிமறைவற்ற வெளிப்படைத் தன்மையும் உறுதி செய்யப்படும். தேவைப்படின், கொள்முதல் செய்யும் விவசாயிகளுக்கு விதைகள் உள்ளிட்ட அனைத்து இடுபொருட்கள், பயிர்க் காப்பீடு, பயிர் பராமரிப்பு மற்றும் அறுவடைச் செலவுகளுக்கு உதவிகள் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. விளைபொருள் நிர்ணயிக்கப்பட்ட தரம் மற்றும் அளவில் குறிப்பிட்ட காலத்தில் கிடைக்குமென்பதால் உணவு பதப்படுத்தும் தொழில் நன்கு மேம்படும். இதன்மூலம் எளிதில் அழுகும் பொருட்கள் வீணாவதிலிருந்து தடுக்கப்பட்டு விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும். உணவு பதப்படுத்தும் தொழில் முன்னேற்றத்தினால் கிராமப்புற வேலைவாய்ப்பு பெருகும்.

**ஒப்பந்த ஷரத்துக்கள்:**

விவசாயி தானாக முன்வந்து ஒப்பந்தம் செய்து கொள்ளலாம், எவ்விதக் கட்டாயமும் இல்லை. பயிர் சாகுபடி மேற்கொள்வதற்கு முன்பே கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. உதாரணமாக, ஒப்பந்தம் போடும்போது தக்காளியின் விலை 45 ரூபாயாக இருந்து, அறுவடை செய்யும் சமயத்தில் விலை 30 ரூபாயானால், ரூபாய் 45 விலையில்தான் தக்காளியை எடுத்துக்கொள்ள வேண்டும். இதனால் விவசாயிகளை விலை வீழ்ச்சியிலிருந்து காக்க முடியும். விலை ஏறுகிறபொழுது குறிப்பிட்டதற்கு மேல் விலையேறினால், அந்த லாபத்தில் விவசாயிக்கு பங்கு கொடுக்க வேண்டும் என அந்த ஒப்பந்தத்திலே இருக்கிறது. சந்தை விலை குறைந்தாலும் ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலை விவசாயிகளுக்கு குறைவின்றி கொடுக்கப்படும். சந்தை விலையில் ஏற்றம் ஏற்படும்போது, கொள்முதலாளர் அளிக்க வேண்டிய அதிகத் தொகை மற்றும் ஊக்கத் தொகை குறித்து ஒப்பந்தம் செய்யும்போதே முடிவு செய்யப்படும்.

இதனால் விலையேற்றம் ஏற்படும்பொழுது விவசாயிகளுக்கு அதற்கேற்ற பலன் கிடைக்கும். இதில் என்ன தவறு இருக்கிறது. இந்த ஷரத்தே அவருக்கு தெரியவில்லை. விவசாயம் பற்றித் தெரிந்தால்தானே அவர் சொல்ல முடியும். நான் விவசாயியாக இருப்பதால் எனக்குத் தெரிகிறது. இந்தச் சட்டத்தின் வாயிலாக விவசாயிகள் நஷ்டம் அடைய மாட்டார்கள்.

மேலும், கொள்முதல் செய்பவர் விவசாய நிலத்தில் எவ்வித உரிமையும் கொண்டாட முடியாது. இதில் கார்ப்பரேட் நிறுவனம் வந்து விடுகிறதென்று ஒரு தவறான செய்தியை சொல்கிறார்கள். இச்சட்டத்தின் பகுதி 2, உட்பிரிவு (6)(3)(b) ஒப்பந்தத்தின்படி, விளைபொருட்களை கொள்முதல் செய்யும்பொழுதே, கொள்முதலாளர் உரிய விலையையும், அதற்கான ரசீதையும் விவசாயிக்கு அளிக்க வேண்டும். இதன்மூலம் விவசாயி உடனடியாக தன்னுடைய விளைபொருளுக்கு உரிய விலை பெறுவது உறுதி செய்யப்படுகிறது. இதில் என்ன தவறு உள்ளதென்று திரு.ஸ்டாலின் அவர்கள் விளக்கினால் பரவாயில்லை.

**<u>இரண்டாவது சட்டம் – விவசாயிகள் விளைபொருட்கள் வணிகம் மற்றும் வர்த்தகம் (ஊக்குவித்தல் மற்றும் உதவுதல்) அவசரச் சட்டம், 2020</u>**

<u>தமிழ்நாட்டில் தற்போதைய நிலை</u> – விவசாயிகள் விரும்பும் இடத்தில் தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்யலாமென்ற சுதந்திரமான நடைமுறை தமிழ்நாட்டில் ஏற்கனவே பின்பற்றப்பட்டு வருகிறது. நம்முடைய இந்த நடைமுறையே இச்சட்டத்தின் மூலம் இந்தியா முழுவதும் இன்றைக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இது ஏற்கனவே தமிழ்நாட்டில் இருக்கிறது, மற்ற மாநிலங்களில் இல்லை. அதனால் மத்திய அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறது. புதிதாக பிறப்பிக்கப்பட்ட இச்சட்டம் விவசாயிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாது. இதன்மூலம் விளைபொருள் பரிவர்த்தனைக் கட்டணம் (Transaction Cost) குறையுமென்பதால் விவசாயிகள் நல்ல விலை பெறுவார்கள். சாகுபடி செய்யும் இடத்திலேயே கொள்முதல் செய்ய இச்சட்டம் வழிவகை செய்யுமென்பதால் விவசாயிகளுக்கு போக்குவரத்துக் கட்டணம், சுமை கூலி உள்ளிட்ட செலவினங்கள் தவிர்க்கப்படுகின்றன. சாகுபடி செய்யுமிடம், தொழிற்கூடங்கள், சேமிப்புக் கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகள் ஆகியவை வணிகப்

பரப்பு (Trade Area) என்று அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதால் இவ்விடங்களில் நடைபெறும் வணிகத்திற்கு வணிகர் சந்தைக் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை, மற்ற மாநிலங்களில் செலுத்திக்கொண்டு வருகிறார்கள்.

விவசாயிகள் விளைபொருட்கள் வணிகம் மற்றும் வர்த்தகம் (ஊக்குவித்தல் மற்றும் உதவுதல்) சட்டம் **2020**, உழவர் சந்தைத் திட்டத்திற்கு எதிரானது என்ற கூற்று முற்றிலும் தவறானது ஆகும். இச்சட்டத்தின் பகுதி ஒன்று, பிரிவு **(m)(ii)**ன்படி, உழவர்–நுகர்வோர் சந்தைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பதால், அவை தொடர்ந்து இயங்குவதற்கு தடையேதும் இல்லை. இதில், எதிர்க்கட்சிகள் எல்லாம் புரளியைக் கிளப்பிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இச்சட்டத்தின் முக்கிய ஷரத்துகள் பிரிவு **(5)(1)**ன்படி மின்னனு வர்த்தகம் மூலம் அகில இந்திய அளவில் போட்டி விலையில் விவசாயிகள் விற்பனை செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால் இடைத்தரகர்களின்றி விளைபொருட்களை விவசாயியே நேரடியாக விற்பனை செய்வதால் நல்ல விலை கிடைக்கும். நாம் அனைத்து வசதிகளும் செய்து கொடுத்துள்ளோம். உழவன் App கொடுத்துள்ளோம். அதன்மூலம் எந்த மார்கெட்டில் என்ன விலையென்று விவசாயிகள் தெளிவாகத் தெரிந்து விவசாயிகள் அவர்களின் விளைபொருட்களை தாராளமாக விற்கலாம். இதில் ஒளிமறைவு ஏதும் கிடையாது. விவசாயியை யாரும் கட்டாயப்படுத்த முடியாது.

இச்சட்டத்தின் பிரிவு **(6)**ன்படி, வணிகப் பரப்பில் நடைபெறும் எந்தவொரு வர்த்தகத்திற்கும் சந்தைக் கட்டணம் அல்லது வரி வசூலிக்கக் கூடாது. ஏற்கனவே, மற்ற மாநிலங்களில் வசூலித்து வருகிறார்கள். இனி, இந்தச் சட்டத்தின் மூலம் வரி வசூலிக்கக் கூடாது. இதனால், பரிவர்த்தனைக் கட்டணம் குறைந்து விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கும். இவையெல்லாம் விவாசாயிகளுக்கு நன்மை கிடைக்கின்ற அம்சமாக கருதப்படுகிறது.

<u>மற்ற மாநிலங்களோடு ஒப்பீடு</u> – பஞ்சாப் மாநிலத்தில் முக்கிய விளைபொருட்களான நெல், கோதுமைக்கு சந்தைக் கட்டணம் மூன்று சதவீதத்துடன், மூன்று சதவீதம் உள்ளாட்சி மேம்பாட்டு மேல் வரியாக (Rural Development Cess) வசூலிக்கப்பட்டு, அந்த மேல்வரி அரசு கணக்கில் சேர்க்கப்படுகிறது. இது தவிர, **2.5** சதவீதம் இடைத்தரகர்களுக்கான கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆக மொத்தம்

**8.5** சதவிகிதம் வணிகர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. இதை ஸ்டாலின் பின்பற்றச் சொல்கிறாரா **?** இந்தச் சட்டத்தின் மூலம் இந்த வரியை வசூலிக்கக்கூடாதென மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டதை இவர்கள் எதிர்க்கிறார்கள். இதை எதிர்ப்பதன் மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்கவேண்டிய இலாபம் போய்விடுகிறது. இந்த **8.5** சதவிகிதத்தை கூடுதலாக கொடுத்து வாங்கும் வியாபாரிகள், இடைத்தரகர்கள் ஏதுமில்லாமல் விவசாயிகளிடம் வாங்கும்பொழுது, விவசாயிக்கு கூடுதல் விலை கிடைக்கிறது. அதனால் இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறோம். இதனால் அரசுக்கு வருமான இழப்பு ஏற்படும் என்ற காரணத்தால், இடைத்தரகர்களும், பஞ்சாப் அரசும் இதை எதிர்க்கிறது. வருடம் ரூபாய் **2** ஆயிரம் கோடி பஞ்சாப் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. இதனால் அவர்கள் எதிர்க்கிறார்கள். ஆனால், நமது மாநிலத்தில் வேறு நிலைமை.

பஞ்சாப் மாநிலத்தில் மத்திய அரசு மூலம் குறைந்தபட்ச ஆதார விலையில் கோதுமை மற்றும் நெல் பெருமளவு கொள்முதல் செய்யப்படுவதால் அது நிறுத்தப்பட்டு விடுமென்ற வதந்தி பரப்பப்படுவதால், தேவையில்லாத பயத்தினால் மட்டுமே பஞ்சாப் மாநில விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். ஆனால், குறைந்தபட்ச ஆதார விலை கொள்முதல் நிறுத்தப்படாதென்று உறுதிமொழியை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், மத்திய அரசும் ஏற்கனவே அறிவித்துள்ளதால் விவசாயிகள் பயமேதும் கொள்ளத் தேவையில்லை.

பீகார் மாநிலத்தைப் பொறுத்தவரை, ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை **2006–**ஆம் ஆண்டு முதல் முழுமையாக மூடிவிட்டார்கள். தனியார் சந்தைகள் மட்டுமே செயல்பாட்டில் இருப்பதால் விவசாயிகள் மற்றும் வணிகர்கள் ஆகிய இருவரிடமிருந்தும் சந்தைக் கட்டணம் வசூலிக்கும் சூழல் தற்போது நிலவி வருகிறது. ஆனால், தமிழ்நாட்டிலுள்ள **282** ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் திறம்பட செயல்பட்டு வேளாண் விளைபொருட்களின் உயிர் நாடியாக விளங்குகின்றன. அதனால் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மேலும் மேம்படுத்தப்பட்டு, முழுமையான போட்டி உருவாக்கப்பட்டு, விளைபொருளுக்கு நல்ல விலை கிடைக்க வழி செய்யப்பட்டு, வேளாண் பெருமக்கள் இலாபம் கிடைக்க, பயன் கிடைக்க, நன்மை கிடைக்க எங்களுடைய அரசு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இப்பொழுதும் உளுந்து, துவரை, பச்சைப் பயறு மற்றும் தேங்காய் கொப்பரை ஆகியவற்றிற்கு குறைந்தபட்ச ஆதார விலை இருந்தாலும், அதற்கு வெளிச்சந்தையில் நல்ல விலை கிடைக்கும்போது விவசாயிகள் அவற்றை வெளிச்சந்தையில் விற்பனை செய்து நல்ல இலாபம் பெற்று வருகிறார்கள். இப்பொழுது கட்டாயமாக சொசைட்டியில் விற்க வேண்டிய அவசியமில்லை. எப்போதேனும் இப்பொருட்களின் விலை குறைந்தபட்ச ஆதார விலைக்குக் கீழ் செல்லும்போது விலை ஆதாரத் திட்டத்தின் கீழ், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் கொள்முதல் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் வெளிச்சந்தை விலை அதிகரித்து வேளாண் பெருமக்கள் நலன் காக்கப்படுகிறது. விவசாயிகள் நலன் காக்க இரண்டு நடைமுறைகளும் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதில் என்ன தவறு உள்ளது சொல்லுங்கள். அவர் தேடித் தேடிப் பார்த்தார், ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை, எனவே, இதை வைத்துக் கொண்டு போராட்டம் என்று அறிவித்துள்ளார்.

<u>மூன்றாவது சட்டம்– அத்தியவாசியப் பொருட்கள் அவசர திருத்தச் சட்டம், 2020</u>

முந்தைய இரண்டு சட்டங்களின் மூலமாக கொள்முதல் மற்றும் குளிர்பதனக் கிடங்கு சேமிப்பு உள்ளிட்ட வசதிகள் மேம்படுத்தப்படும் என்பதால் அத்தியாவசியப் பொருட்கள் அவசர திருத்தச் சட்டம், 2020ல் வேளாண் விளைபொருட்களின் இருப்பு தளர்வுகள் அளிக்கப்பட்டுள்ளன. தானியங்கள், பருப்பு வகைகள், உருளைக்கிழங்கு, வெங்காயம், சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் ஆகியவை போர், பஞ்சம், அசாதாரணமான விலை உயர்வு மற்றும் இயற்கை பேரிடர் போன்ற சூழ்நிலைகளில், கட்டுப்பாடுகளை விதிக்க அரசால் அரசிதழில் அறிவிக்கை செய்து, முறைப்படுத்த வழிவகை செய்யப்படுகிறது. இச்சட்டத்தின்படி, தோட்டக்கலை விளைபொருட்களின் விலையேற்றம் 100 சதவீதத்திற்கு மிகும்போதும், வேளாண் விளைபொருட்களின் விலையேற்றம் 50 சதவீதத்திற்கு மிகும்போதும், அவற்றின் இருப்பு அளவினை (Stockholding Limit) நெறிமுறைப்படுத்த முடியும் என்பதாலும் கார்ப்பரேட்

நிறுவனங்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்குவதற்கு வாய்ப்பில்லை. இதனால் விவசாயிகள் மற்றும் நுகர்வோர் பயன்பெறுவார்கள்.

**கேள்வி:** எதிர்க்கட்சித் தலைவர், 8 மாதத்தில், 6 மாதத்தில் திமுக ஆட்சிக்கு வந்துவிடும் என்று சொல்கிறார், ஏற்கனவே 2 மாதங்களில் கவிழ்ந்துவிடும் என்று சொன்னார், இது குறித்து...

**பதில்:** அந்த ஜோசியத்தை கண்டுபிடித்து சொன்னீர்கள் என்றால், எங்களுக்கும் நன்றாக இருக்கும். அவர் ஜோசியம் பார்க்கிறாரென்று நினைக்கிறேன். நாங்கள் ஜோசியம் பார்ப்பதில்லை, மக்களைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். யார் ஆட்சிக்கு வரவேண்டும் என்பது மக்களிடத்தில்தான் இருக்கிறது, ஸ்டாலிடனிடம் அல்ல.

**கேள்வி:** திமுக எம்.பி. கதிர் ஆனந்த் அவர்களை டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் மிரட்டினார்களாமே ?

**பதில்:** அரண்டவனுக்கு மிரண்டதெல்லாம் பேய் என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதுபோல், எதையுமே கண்டுபிடிக்க முடியவில்லை. மிரட்டினால் பயப்படுகிறவர்களா அவர்கள் ? இதை நாட்டு மக்கள் நம்புவார்களா ? அதுவும் யார் ? துரைமுருகன் அவர்களுடைய மகன், அவரை மிரட்ட முடியுமா ? இதெல்லாம் வேண்டுமென்றே திட்டமிட்டு அவதூறு செய்தியை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**கேள்வி:** 10 வருடம் பொறுத்திருந்த நாங்கள் 6 மாதங்கள் பொறுக்க முடியாதா ? எங்கள் கொடிதான் சட்டமன்றத்தில் பறக்கப் போகிறது என்று ...

**பதில்:** பொறுங்கள், பொறுத்திருங்கள், நாங்கள் வேண்டாம் என்று சொன்னோமா.

**கேள்வி:** உங்களுடைய நிலைபாடு...

**பதில்:** நாங்கள்தான் எங்களுடைய நிலைபாட்டை சொல்லியிருக்கிறோமே. மக்களுக்காக நிறைய திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். மதுரையில் ரிங்ரோடு, போட்டுக் கொடுத்திருக்கிறோம், நிறைய பாலங்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறோம். வைகை ஆற்றின் ஓரமாக இரண்டு பகுதிகளிலும் நிறைய கட்டடங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். எய்ம்ஸ் மருத்துவமனை கொடுத்திருக்கிறோம். 11 மருத்துவக் கல்லூரிகள், சட்டக் கல்லூரி, அதிகமான அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரிகள் போன்றவற்றை கொடுத்திருக்கிறோம். கல்வியில் பல திட்டங்களை கொடுத்திருக்கிறோம். குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக பல திட்டங்களை கொடுத்திருக்கிறோம். தடுப்பணைகளை கட்டிக் கொடுத்திருக்கிறோம். இராமநாதபுரம் மாவட்டத்தில் காவேரி–குண்டாறு இணைப்பு திட்டத்தை சுமார் ரூபாய் 14,000 கோடி செலவில் நிறைவேற்றவிருக்கிறோம். அந்தத் திட்டத்தின் மூலமாக கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள ஏரிகள் நிரப்பப்படும். ஒவ்வொரு ஆண்டும் மேட்டூர் அணையிலிருந்து கடலில் வீணாக கலக்கும் உபரி நீரை நாங்கள் தடுப்பணை கட்டி திருப்பி விட்டு வறண்ட பகுதியிலுள்ள ஏரிகளுக்கு அனுப்புகிறோம். இவ்வளவு திட்டங்களை செய்திருக்கிறோம். மக்களை துணிச்சலாக பார்ப்போம். இந்த ஆட்சி மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை பொறுக்க முடியாமல் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றியெல்லாம் எங்களுக்கு கவலையில்லை. எங்களைப் பொறுத்தவரை, மக்களுக்கு செய்யவேண்டிய திட்டங்களை சிந்தாமல், சிதறாமல் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

**கேள்வி:** மதுரைக்கு அதிகமான திட்டங்களை கொடுக்கிறோம் என்கிறீர்கள், தமிழகத்தின் இரண்டாவது தலைநகராக மதுரையை அறிவிக்க வேண்டுமென்பது தென் மாவட்ட மக்களின் நீண்டநாள் எதிர்பார்ப்பாக இருக்கிறதே ?

**பதில் :** ஒவ்வொரு மாவட்டத்திலும் அப்படித்தான் கேட்கிறார்கள். அப்படியென்றால் எவ்வளவு தலைநகரம் அறிவிக்க முடியும்.

**கேள்வி:** கொரோனா நோயாளிகளுக்கு சிறப்பான முறையில் உணவு தரக்கூடிய அம்மா கிச்சனின் 100–வது நாள் விழாவிற்கு நீங்கள் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறதா ?

**பதில் :** இது நல்ல திட்டம்தான். ஆனால் நிறைய பணிகள் இருப்பதால் வாய்ப்பு குறைவாக இருக்கிறது. இந்தத் திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றுகின்ற அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட சோதனையான நேரத்தில், அம்மா கிச்சன் மூலமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல சத்தான உணவைக் கொடுத்து குணமடைந்து வீடு திரும்புகின்ற காட்சி ஒரு முன்னுதாரணமாக இருக்கிறது என்பதை நான் பாராட்டுகிறேன்.

**கேள்வி:** சமீபத்தில் காவல் நிலையங்களில் Lock-up death அதிகரிக்கிறது என்று சொல்கிறார்கள், திருப்பூரில்கூட ஒரு Lock-up death நிகழ்ந்திருக்கிறதே ?

**பதில்:** எதுவாக இருந்தாலும், மரணம் என்று சொல்கின்றபொழுது, விசாரணை என்பது இருக்கிறது. அந்த விசாரணையில் யார் தவறு செய்திருந்தாலும், உடனடியாக எங்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். விசாரணை செய்யாமல் எதையும் சொல்ல முடியாது.

**கேள்வி:** ஆக்சிஜன் பற்றாக்குறை காரணமாக திருப்பூர் அரசு மருத்துவமனையில் 3 நபர்கள் இறந்திருக்கிறார்கள் ?

**பதில்:** அப்படியெல்லாம் இல்லை, தவறான செய்தி. திருப்பூரில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் ஆக்சிஜனோ, மருத்துவ உபகரணங்களோ தேவையான அளவிற்கு கையிருப்பில் இருக்கின்றது. நீங்கள் சொல்லும் கருத்து சரியாக, தவறா என்று செய்தி வரவில்லை. அங்கு இதுபோன்று ஒரு சம்பவம் நடந்திருந்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**கேள்வி:** 20 மணி நேரத்தில் ஒரு லட்சம் உறுப்பினர்களை சேர்த்திருக்கிறோம் என்று ஸ்டாலின் கூறுகிறாரே ? உங்கள் நிலைபாடு என்ன ?

**பதில்:** இப்படி Build up செய்ய வேண்டியதுதான். நாங்கள் மக்களுக்கு என்னென்ன திட்டங்களை செய்தோம் என்று சொல்கிறோம். அவர், உறுப்பினர்களை சேர்த்தோம் என்று சொல்லிக் கொண்டே இருக்க வேண்டியதுதான். காணொலிக் காட்சி மூலம் உள்ளே புகுந்து கொள்கிறார். நான் நேரடியாக சென்றால், ஊர், ஊராக இவர் செல்கிறார் என்று சொல்கிறார். ஊர், ஊராக செல்வது தவறா ? மக்களைப் பார்ப்பது தவறா ? நீங்கள் கேள்வி கேட்கிறீர்கள், நான் பதில் சொல்கிறேன். இது நாட்டுமக்களுக்கு சென்று சேர்கிறது. அவர் வீட்டில் இருந்துகொண்டே Cooling glass போட்டுக் கொள்கிறார். அங்கே கூட, அந்த நோய்ப் பரவல் வந்துவிடுமென்று வீட்டிலிருக்கும்பொழுதே glouse, mask, shoe போன்றவை அணிந்து கொண்டு செல்கிறார்கள். நாங்கள் அப்படி போவதேயில்லை. மக்களுக்காக தியாகம் செய்வதற்கு இறைவன் இந்த உடலை கொடுத்திருக்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் மற்றும் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் தியாகம் செய்த தலைவர்கள். அவர்கள் இருவரையும் மக்கள் தெய்வமாக பார்க்கின்றார்கள். அப்படிப்பட்ட இயக்கத்தில் இருக்கின்ற நாங்கள் மக்கள் சேவைக்காக எங்களை அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம். எதிர்க்கட்சிகள் சொல்வதையெல்லாம் நாங்கள் பொருட்படுத்தவில்லை. மக்களுக்கு என்ன நன்மைகள் செய்யவேண்டுமோ, அவற்றை சிந்தாமல், சிதறாமல் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவல் தடுப்புப் பணிகளை பொறுத்தவரை, எங்களுடைய அரசு சிறப்பாக பணிபுரிந்து வருகிறது. கொரோனா பாதிப்பு இருக்கும் என்ற நிலையில் கூட, அனைத்து அமைச்சர்களும் ஒவ்வொரு பகுதியாகச் சென்று மக்களுக்கு நன்மை கிடைக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கவும், பாதிக்கப்பட்டவர்கள் குணமடைவதற்கும் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்ட காரணத்தினால் தான் சென்னையில் இந்நோய்ப் பரவல் குறைந்திருக்கிறது. மும்பை, ஆந்திரா, ஹைதராபாத், பெங்களூரு போன்ற இடங்களில்

அதிகரித்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், எங்களுடைய அரசு மற்றும் எங்கள் அமைச்சர் பெருமக்கள் எடுத்த நடவடிக்கைகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்த முயற்சிகள், கழக பொறுப்பாளர்கள் எடுத்த முயற்சிகள் போன்ற நடவடிக்கைகளால், இங்கு இந்நோய்ப் பரவல் வெகுவாகக் குறைந்திருக்கிறது. நீங்கள் கூறியதைப் போல் அம்மா கிச்சனை அமைத்து, 100 நாட்கள் தொடர்ந்து அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றியிருக்கிறோம். இந்த சோதனையான நேரத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கு துணை நிற்கவேண்டும் என்ற அடிப்படையில் நம்முடைய கட்சி நிர்வாகிகள், மாண்புமிகு அமைச்சர்கள் தலைமையில் ஒருங்கிணைந்து பணியாற்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல உணவைக் கொடுத்து, அவர்கள் அதிலிருந்து மீளவேண்டுமென்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நல்ல செயல்களை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். 1 லட்சம் உறுப்பினர்களை, 2 லட்சம் உறுப்பினர்களை சேர்த்திருக்கிறேன் என்று அவர் கூறுகிறார். சேர்ந்துக் கொள்ளுங்கள் யார் வேண்டாம் என்றார்கள் ? அது அவருடைய கட்சி, நாங்கள் எப்படி தலையிட்டு பேசமுடியும் ?

நன்றி, வணக்கம்.

------